**தலைப்பு 331 – சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உறுப்புரையின் பிரகாரம் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) உறுப்புரையின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல்,

வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பபாக இந்த அறிக்கையின் 1.6.3 (இ) பந்தி தொடர்பான எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கட்டுநிதி இணக்கக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் கட்டுநிதி கணக்கின் மீதி ரூபா 3,986,130,203 ஆக காணப்பட்டதுடன், திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் அம் மீதி ரூபா 380,538 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் வேறுபாடு ரூபா 3,985,749,665 ஆக காணப்பட்டது. அவ் வேறுபாட்டினை இணக்குவதற்கு அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிக்காட்டி இல 06 மற்றும் 7(vi) பந்தியின் பிரகாரம் கட்டுநிதி இணக்க கூற்றொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. தயாரிக்கப்பட்டிருந்த இணக்க கூற்று தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) நிதி பிரமாணம் 208 பிரகாரம் திணைக்களத்தினால் ஏனைய செலவு விடயங்களுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 5,000,281,664 ஆன பணத்திற்கு பதிலாக ரூபா 5,001,862,782 கட்டுநிதி இணக்க கூற்றிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் ரூபா 1,581,113 கூடுதலாக செலவு வைக்கப்பட்டிருந்தது. | முன்வைக்கப்பட்டிருந்த அவதானிப்பிற்கு பதில் தொடர்புபடாது. | அனைத்து இணக்கங்களும் சரியாக அடையாளப்படுத்தப்பட்டு அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிக்காட்டியின் பிரகாரம் கட்டுநிதி கணக்கு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) திணைக்களத்தினால் ஏனைய வருமான குறியீடுகளுக்காக சேர்க்கப்பட்டிருந்த ரூபா 741,844,910 ஆன வருமானம் அரச கணக்குகள் திணைக்களத்தின் 06 ஆம் இலக்க 7(ii) பந்தியின் பிரகாரம் கட்டுநிதி இணக்க கணக்கில் குறிக்கப்பட கூடாதிருப்பினும், அப் பெறுமதி இணக்க கணக்கில் செலவு மற்றும் வரவு ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏனைய திணைக்களங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட சேர்த்தல் என்பதினால் கட்டுநிதி கணக்கின் செலவு மற்றும் வரவாக காண்பிக்கப்பட்டுள்ளது. அக் குறிப்பின் ஊடாக நிதி செயலாற்றலில் கட்டுநிதி கணக்கிற்கு தாக்கம் ஏற்படாமையினால் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் கட்டுநிதி இணக்க கணக்கு திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) திணைக்களத்தின் புத்தகத்தின் பிரகாரம் முற்பண பெறுவனவுகள் ரூபா 50,354,051 ஆக காணப்படினும் திறைச்சேரி புத்தகத்தின் பிரகாரம் முற்பண பெறுவனவுகள் ரூபா 48,124,268 ஆகியமையினால் வேறுபாடு ரூபா 2,229,783 கட்டுநிதி இணக்க கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டியிருந்தது. அவ்வாறே, திணைக்கள புத்தகத்தின் பிரகாரம் முற்பண செலுத்தல் ரூபா 45,636,931 ஆக காணப்படினும், திறைச்சேரி புத்தகத்தின் பிரகாரம் அது ரூபா 46,749,209 ஆகியமையினால் ஏற்பட்ட வேறுபாடு ரூபா 1,112,278 கட்டுநிதி இணக்க கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் முற்பண பெறுவனவுகள் மற்றும் செலுத்தல்களாக கூட்டுத்தொகை ரூபா 3,342,061 கட்டுநிதி இணக்க கணக்கு வரவு வைக்கப்பட வேண்டியிருப்பினும், ரூபா 4,542,440 வரவு வைக்கப்பட்டமையினால் ரூபா 1,200,380 கூடுதலாக கட்டுநிதி கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதி இணக்கப்படும் கணக்கு தயாரிக்கப்படும் போது மேற்கொள்ளப்பட வேண்டிய இணக்கங்கள் தொடர்பாக காணப்பட்ட குழப்பமான நிலையினால் கட்டுநிதி இணக்க கணக்கிற்கு முற்பண பீ கணக்கின் குறிப்பு இணக்கங்களும் குழப்பமாக காணப்படுகின்றன. இணக்க குறிப்புக்கள் சரியாக காண்பிக்கப்படாமையின் அடிப்படையில் கட்டுநிதி இணக்க கணக்கில் வெளிப்படுத்தப்படுகின்ற குறைப்பாடு செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிக்கு தாக்கமளிக்காதமையினால் கட்டுநிதி இணக்க கணக்கு தொடர்புடைய குறிப்புகள் இணக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 1.6.2 நிதி நிலைமை கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் சமூர்த்தி FM இணைய வானொலி சேவைக்காக ரூபா 1,127,000 பெறுமதியான தொடர்பாடல் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் நிலையான சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் சமூர்த்தி FM இணைய வானொலிக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,127,000 பெறுமதியான தொடர்பாடல் உபகரணகள் அறிக்கையிடப்பட்டிருப்பது 2509 செலவு விடயத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்தென்பதனால் அது நிலையான சொத்து செலவு விடயங்களின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | நிலையாயன சொத்துக்களாக நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் அறிக்கையிடப்பட வேண்டும். |
| (ஆ) | பண்டாரவலை சுற்றுலா பங்களா அமைந்துள்ள 1 ஹேக்கர் நிலப்பகுதி மற்றும் கண்டி அலுவலக வளாகம் அமைந்துள்ள 1 ரூட் உம் 3.82 பர்சஸ் ஆன காணி சட்டரீதியாக கையகப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது, அக் காணி பகுதிகள் முறையைாக ரூபா 20,000,000 மற்றும் ரூபா 21,900,000 இற்கு மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ஆலோசனையின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட பெறுமதி கணக்கிடப்பட்டதுடன் பண்டாரவலை சுற்றுலா பங்களா அமைந்துள்ள காணி அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அடிப்படை ஆரம்ப திட்டம் பெறப்பட்டதன் பின்னர் கையகப்படுத்தல் நடவடிக்கைகள் மெற்கொள்ளப்படுமென பண்டாரவலை பிரதேச செயலாளரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. கண்டி கட்டெம்பே உப அலுவலக வளாகம் அமைந்துள்ள காணி இதுவரையில் கையகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்த காணி மற்றும் கட்டிட சொத்து கையேற்றல் மற்றும் கையகப்படுத்தல் நடவடிக்கைகள் தாமதமின்றி நிறைவேற்றப்படல் வேண்டும். |
| (இ) | 1996-2013 ஆண்டு வரையான காலப்பகுதியினுள் திணைக்களத்திற்கு கையகப்படுத்திக் கொண்ட 10 காணிகள் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுப்படாமை. | ஒரு காணி மதிப்பிடப்பட்டுள்ளதுடன் 07 காணிகள் மதிப்பிடப்படுவதற்கு தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஒரு காணி மண் சரிவிற்கு உள்ளாவதுடன் ஏனைய காணிகள் தொடர்பாக தகவல்கள் கோரப்பட்டு பிரதேச செயலாளருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | காணி திணைக்களத்திற்கு கையகப்படுத்தப்பட்டு மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |

**1.6.3 காசு பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஏனைய விடயங்களுக்காக சேர்க்கப்பட்ட ரூபா 741,844,910 ஆன வருமானம், காசுப் பாய்யல் கூற்றில் ரூபா 85,734,851 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையினால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சல் ரூபா 656,110,059 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்டும் போது காசு அடிப்படையில் அது தயாரித்தமை காரணத்தினால் ஏனைய விடயங்களுக்காக குறுக்கு பதிவு ஊடாக சேர்க்கப்பட்ட வருமானமான ரூபா 656,110,059 ஆன பெறுமதி குறைக்கப்பட்டு காசு பெறுவனவு மட்டும் குறிப்பிடப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் ஊடாக அறிமுகப்படுத்தியிருந்த வழிக்காட்டின் பிரகாரம் சரியாக காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஆளணி வேதனம் மற்றும் செயற்பாட்டு செலவினம், மானியங்கள் மற்றும் மாற்றல்கள் மற்றும் ஏனைய செலவு விடயங்களுக்காக ஏற்கப்பட்ட செலவினங்களுக்கு தொடர்பாக, செலவு விடயங்கள் பிரகாரம் செலவினங்களுடன் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள மீதி இணக்கப்படாமை காரணத்தினால் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் ரூபா 1,083,476,172 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | காசினை அடிப்படையாகக் கொண்டு காசுப் பாய்ச்சல் கூற்று தாயரிக்கப்படும் போது அவதானிப்பில் காண்பிக்கப்படுகின்ற செலவு விடயங்களில் குறுக்கு பதிவு ஊடாக அறிக்கையிடப்படுகின்ற செலவு குறைக்கப்பட்டு காசினால் அறிக்கையிடப்பட்டிருந்த செலவினம் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலில் அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் அறவிடல் ரூபா 5,083,542 மற்றும் முற்பண செலுத்தல் ரூபா 4,866,838 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | முற்பண பீ கணக்கில் காசினால் அறவிடல் மற்றும் காசினால் செலுத்தல் மட்டும் காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பௌதீக சொத்துக்கள் நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகள் கையகப்படுத்தல் ரூபா 120,201,516 கூடுதலாக முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப் பாச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படும் போது குறுக்கு பதிவு ஊடாக திறைச்சேரிக்கு அறிக்கையிடப்பட்ட ரூபா 39,286,928 ஆன பெறுமதி குறைக்கப்பட்டதன் பின்னர் காசினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலான ரூபா 122,628,387 ஆன பெறுமதி உள்ளடக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

-------------------------------------------------------------

திணைக்களத்தினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்**<br>------------------------- | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**<br>-------------------------------- | **பரிந்துரைகள்**<br>------------- |
|---|---|---|---|
| (அ) | **பிணைகள் பதிவேடு**<br>---------------------- | | |
| | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதுடன் அரச உத்தியோகத்தர்களின் பிணைகள் பதிவேடு பேணிச் செல்லல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | ஏற்பாடுகளின் பிரகாரம் பிணைகள் வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைகள் பதிவேடொன்று பேணிச்செல்லல் வேண்டும். |
| (ஆ) | **நட்டங்கள் தொடர்பான பதிவேடு**<br>--------------------------------------- | | |
| | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவிலலை | நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

(இ) **வாகன நிரட்படுத்தும் பதிவேடு**

-----------------------------------

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரட்படுத்தும் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணம் 1647 பிரகாரம் வாகனங்கள் பதிவேடொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

----------------

### 2.1 செலவின முகாமைத்துவம்

-------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| ------------------------ | ------------------------------- | ------------- |
| நிதிப் பிரமாணம் 50 பிரகாரம் மதிப்பீடு சரியாக தயாரிக்காமையின் காரணத்தினால் 7 மீண்டெழும் செலவு விடயங்களுக்கு தொடர்பாக ரூபா 525,950,00 வேறு செலவு விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்தது. | இந்த திணைக்களத்திற்கு பணிக்கப்பட்ட விசேட கடமையின் காரணத்தினால் சில செலவு விடயங்களின் செலவு தேவைகள் உயர்வடைந்தமையின் காரணத்தினால் உள்ளக இணக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு நி.பி 66 இன் கீழ் நிதியேற்பாடு மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | மதிப்பீடு சரியாக தயாரித்து செலவினங்கள் முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | ------------------------ | ------------------------------- | ------------- |
| **(அ)** | 2019 திசெம்பர் 3 திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி ஆண்டிற்கு தொடர்புடைய அனைத்து பொறுப்புக்களும் அடுத்த ஆண்டிற்கு கொண்டு சென்று அத் தொகை அந் நிதி ஆண்டினுள்ளேயே | 2020 ஆண்டின் முதல் மற்றும் இரண்டாம் காலாண்டு இறுதியில் முன் அறிப்பு இல்லாது அறிக்கையிடப்பட்ட செலவினத்திற்கு செலவு விடய ஏற்பாடு மட்டுப்படுத்தப்படல் காரணத்தினால் ஆண்டு இறுதியில் நி.பி 66 ஊடாக மாற்றப்பட்டதன் ஊடாக அல்லது இணக்கம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக கடப்பாடுகளுக்கு உட்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டு விடுவிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டின் நிதி கூற்றுக்களுக்கு ரூபா 107,202,908 ஆன பொறுப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும், 13 செலவு விடயங்களின் ரூபா 1,801,065 ஆன சேமிப்புக்களை விஞ்சி ரூபா 102,875,809 ஆன பொறுப்புகளுக்கு உட்பட்டிருந்தது. | செய்யப்படாத பொறுப்புகள் அறிக்கையிடப்பட்துடன் 02 ஆம் நிகழ்ச்சித்திட்டத்தின் 1101 ஆன போக்குவரத்து செலவின செலவு விடயத்தில் அறிக்கையிடப்பட்டிருந்த பொறுப்பு அதற்கு உதாரணமாகும். இந் நிலை கட்டுப்படுத்த முடியாதமையினால் நிதியேேட்டினை விஞ்சிய பொறுப்பொன்று அறிக்கையிடப்பட்டிருந்தது. | |
| **(ஆ)** | 5 மாவட்ட செயலகங்களுக்கு தொடர்புடைய 9 செலவின விடங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 10,099,602 ஆன பொறுப்பு தொடர்பான தகவல்கள் பொறுப்பு கூற்றிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி கணக்கிற்கு பொறுப்பு உள்ளடக்கப்பட்டதன் பின்னர் அறிக்கையிடப்பட்டிருந்த அவதானிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த பொறுப்பு கணக்கிற்கு உள்ளடக்கப்படாமையை ஏற்றுக் கொள்கின்றேன். அப் பொறுப்பு பதியப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு செயற்படுகின்றேன. | -மேற்படி- |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களம் நிதி கட்டுப்பாட்டிற்காக வினைத்திறன்மிக்க கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றமை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தப்படல் வேண்டிதுடன் அம் முறைமையின் பயனுறுதிதன்மை தொடர்பாக உரிய காலத்தில் மீளாய்வு | கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 அம் உறுப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை வினைத்திறனாக பேணிச்செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், அம் மீளாய்வுகள் எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும், அவ்வாறாக மேற்கொள்ளப்பட்டமைக்கு அறிக்கை கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவைப்படுகின்ற பிரகாரம் குறித்த காலப்பகுதிக்குள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் வழங்குதல் இடம் பெறுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்திரோயகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்தப்பட வேண்டியிருப்பினும், அறிக்கையின் 3.7 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த ஆண்டினுள் கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதில் பெற்றுக் கொடுக்கும் போது தாமதம் ஏற்பட்டமையை ஏற்றுக் கொள்கின்றேன். தற்போது அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளதுடன் விரைவாக முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | -மேற்படி- |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன

| அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| (i) நிதி பிரமாணம் 381 (**i**) | 03 பயிற்சி நிலையங்களில் திறைச்சேரியின் அங்கீகாரம் பெறப்படாது வங்கி நடைமுறை கணக்குகள் பேணிச் செல்லப்பட்டிருந்தது. | 03 பயிற்சி நிலையங்களின் நடைமுறை கணக்குகள் பேணிச் செல்லப்படுவதற்காக திறைச்சேரியிடம் அங்கீகாரம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 189 மற்றும் 486 | 2020 திசெம்பர் மாதம் வங்கி கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் 11 மாதங்கள் தொடக்கம் 3 ஆண்டுகள் வரையான காலப்பகுதியினுள் வைப்பு செய்யப்படினும் தீர்க்கப்படாத 11 காசோலைகளுக்கு தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 1,895,569 தொடர்பாக நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 1,895,569 ஆன தொகை மானிய சேமிப்புக்கள் பெறல் மற்றும் முற்பண பீ கணக்கின் பெறல் இரண்டு முறை பதியப்பட்டமை என அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 1994 ஆகஸ்ட் 3 திகதிய 26/92(1) ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | 140 வாகனங்கள் தொடர்பாக மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகன மீளாய்வு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. அறிக்கை விரைவாக முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 18 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தி | நிதியமாக ஸ்தாபிக்கப் பட்டுள்ள திவிநெகும நிதியம், வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியம், வங்கி சங்கங்கள் எழுதுகருவி சுழற்சி நிதியம், பணியாளர் கடன் சுழற்சி நிதியம் பேணிச் செல்லும் தேவை கருத்திற் கொள்ளப்பட்டு அவை சட்டமாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2013 இன் 1 ஆம் இலக்க திவிநெகும (சமூர்த்தி) சட்டத்தின் 45 ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த நிதியம் சட்டபூர்வமான நிதியமாகாக்கப்பட்டுள்ளது. அந் நிதியம் சட்டரீதியாக்கப்படுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதியம் பாராளுமன்ற சட்டத்தின் ஊடாக சட்டபூர்வமாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| ------------------------- | -------------------------------- | ------------- |
| 2016 யூலை 14 திகதிய 01/2016 ஆம் இலக்க வர்த்தக முதலீட்டு கொள்கை சுற்றறிக்கையின் 1.1 பந்தியின் பிரகாரம் மோட்டார் வாகன சலுகை உரிமம் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக 2006 ஏப்ரல் 25 திகதிய 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையில் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் DMS/1284/Vi ஆம் இலக்க மற்றும் 2019.07.05 திகதிய கடிதத்தின் 01 ஆம் பின்னிணைப்பில் 13 ஆம் இலக்கத்தின் கீழ் எடுக்கப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு மட்டும் 2014.01.03 ஆம் திகதி தொடக்கம் இது | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

குறிப்பிடப்பட்டுள்ள ‘‘சிரேஸ்ட மட்டத்திற்கு’’ உரிய நிறைவேற்று பதவியில் 06 ஆண்டுகள் தொடர்ச்சியான சேவைக்காலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அரச ஊழியராக காணப்படல் வேண்டும். அவ்வாறாயினும், அச் சுற்றறிக்கையின் 2.3 பந்தியின் பிரகாரம் தகுதி பெறுகின்ற பதவியில் தனிப்பட்டதாக அல்லது அதிஉயர் சேவை அடிப்படையில் நியமிக்கப்பட்டு உத்தியோகத்தர்கள் இதற்காக உரித்து பெறாமையை குறிப்பிட்டிருக்கையில் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாது தனிப்பட்டதாக பதவி பெற்ற வினைத்திறமைகாண் தடை பரீட்சை சித்தி பெற்று நிரந்தர நியமம் பெறப்படாத உதவி பணிப்பாளர் பதவி வகிக்கின்ற 20 நபர்களுக்கு 2020 பெப்ரவரி 26 ஆம் திகதி சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன உரிமம் பத்திரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. வரையில் தொடர்ச்சியான சேவைக்காலம் 06 ஆண்டுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதென்றால் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை 01/2018 மற்றும் அதன் திருத்தத்தின் கீழ் சலுகை அடிப்படையில் வாகன உரிமம் பத்திரம் பெற்றுக் கொடுக்க முடியுமென வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை பணிப்பாளர் நாயகத்தின் TIP/SS/01/129 ஆம் இலக்க மற்றும் 2020.02.26 திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள அங்கீகாரம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கின்றேன்.

**2.6 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தியின் பிரகாரம் பணி நிறைவடைந்தவுடனே பெற்றுக் கொடுக்கப்பட்ட இடைக்கால கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டியிருப்பினும் 13 உத்தியோகத்தர்களுக்கு 20 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 576,730 ஆன முற்பணம் தீர்ப்பதற்கு 02 வாரங்கள் தொடக்கம் 11 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்தது. | 2020 ஆம் ஆண்டில் தற்காலிக இடைக்கால கட்டுப்பணம் தீர்த்தல் குறைந்தபட்டசமாக 07 நாட்கள் காலத்தினுள் மேற்கொள்ளப்படுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் குறித்த காலப்பகுதிக்குள் முற்பணம் தீர்த்தல் கணக்கிடப்படுவதற்கு முடியாதுபோனது. இந் நிலை கட்டுப்படுத்தப்பட்டு குறித்த வண்ணம் முறையான வேலைத்திட்டமொன்று தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | 2020 ஆகஸ்ட் 18 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) பிரகாரம் பணி நிறைவடைந்தவுடனே பெற்றுக் கொடுக்கப்படுகின்ற இடைக்கால கட்டுப்பணம் தீர்க்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கின் செலவு மீதியின் உயர்ந்தபட்ச எல்லை ரூபா 350,000,000 ஆக காணப்படினும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு உள்ளவாரான மீதி ரூபா 47,656,425, அதாவது 13.6 சதவீதமாக காணப்பட்டது. அவ் எல்லை தொடர்பாக தேவையான திருத்தங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பில் கூறப்பட்டுள்ள விடயம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு எதிர்காலத்தில் முற்பண பீ கணக்கின் எல்லை தொடர்பாக கவனமாக இருந்து தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | எல்லைலகள் தொடர்பான மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | சமூர்த்தி அதிகார சபை காணப்பட்ட காலத்தில் உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட பணியாளர் கடன் சுழற்சி நிதியம் தொடர்ச்சியாக பேணிச் செல்லல் தொடர்பாக திறைச்சேரியின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்படாது அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் வழங்கலின் கீழ் 2020 ஆம் ஆண்டில் 302 | 2014 ஆம் ஆண்டின் கடன் சுழற்சி நிதியத்தில் கணக்கு தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டது. கணக்காய்வினால் காண்பிக்கப்பட்ட குறைப்பாடுகள் திருத்தப்பட்டு அவை தயாரிக்கப்படுவதற்கு கருத்திற் கொள்ளப்பட வேண்டிய காலம் கடக்கும் என்பதனால் தாமதம் காணப்படினும் அக் கணக்கு விரைவாக கணக்காய்விற்கு | திறைச்சேரியின் ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கும் நிதியத்தின் கணக்கு கணக்காய்விற்கு முன்வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களுக்காக ரூபா 66,257,360 ஆன இடர் கடன் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. இப் பிரகாரம் பணியாளர் சேவை கடன் சுழற்சி நிதியத்திலிருந்து தொடர்ச்சியாக கடன் பெற்றுக் கொடுக்கப்படினும், நிதியத்திற்காக 2014 ஆம் ஆண்டில் இருந்து 2021 ஆம் ஆண்டு வரை 8 ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இற்கு 220 உத்தியோகத்தர்களின் நிலுவையாக காணப்பட்ட முற்பண கடன் மீதி ரூபா 4,801,126 ஆக காணப்பட்டது. இந்த கடன் மீதியில், 05 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா 751,999 உம், 4 ஆண்டுகள் தொடக்கம் 5 ஆண்டுகள் இடையேயான பழைய கடன் மீதி ரூபா 580,701 உம், 01 ஆண்டு தொடக்கம் 03 ஆண்டுகள் இடையேயான நிலுவை கடன் மீதி ரூபா 3,434,065 உம் ஆக உள்ளடக்கப்பட்டு காணப்பட்டது. | அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 220 உத்தியோகத்தர்களும் 05 குழுக்களில் உள்ளடங்குவர். ஓய்வு பெற்ற மற்றும் மரித்த உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய கோப்புக்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றமையினால் அதன் பிரகாரம் ஒவ்வொரு உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய பணம் அறவிடப்படுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இடமாற்றப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதி விரைவாக தீர்ப்பதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் ஒழுக்காறு பரிசோதனைகள் நிறைவு செய்யப்பட்டவுடனே அவ் உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிடப்படவுள்ள தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்களுக்காக கடன் வெளியிடல், கடன் அறவிடல் மற்றும் அறவிடப்பட வேண்டிய மீதி கணிக்கப்படல் போன்றன சரியாக மேற்கொள்ளப்பட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.7 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பயிற்சி நிலையங்களிலிருந்து சேர்க்கப்பட்ட வருமானம் அரச வருமானத்திற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அதனூடாக செலவினம் ஏற்கப்பட்ட பின்னர், எஞ்சிய தொகை ரூபா 1,948,408 பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பயிற்சி நிலையங்களின் செலவினம் ஏற்றல் அவ் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிர்வாக செலவில் ஆகும். பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்படுவது அந் நிர்வாக செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட பகுதியாவதுடன் இரண்டு ஆண்டுகள் இறுதியில் அம் மீதி வருமானத்திற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2020 ஆம் ஆண்டில் சமனலவெவ பயிற்சி மத்திய நிலையம் கொரோனா சிகிச்சை மையமாக கையகப்படுத்தப்பட்ட காரணத்தினால் அம் மத்தியநிலைய கணக்கில் காணப்பட்ட மீதி வைப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டது, மீண்டும் மத்திய நிலையம் கையகப்படுத்தப்பட்ட பின்னர் நிர்வாக செலவு மற்றும் அரச வருமானம் கணிக்கப்பட்டு கணக்கு வைக்கும் நோக்கத்திலாகும். | குறித்த பணிக்காக சட்டத்தினால் ஒதுக்கப்படாத அனைத்து பெறுவனவுகளும் அரசிள் ஒருங்கிணைந்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டியதுடன் பயிற்சி மத்தியநிலையங்கள் நடத்தப்படுவதற்காக பாதீட்டு நிதியேற்பாடு ஒதுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2013 ஆகஸ்ட், செப்தெம்பர் மற்றும் ஒக்தோம்பர் மாதங்களில் சமூர்த்தி மானியம் செலுத்துவதற்காக வங்கி நிதி பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 2,374 மில்லியன் ஆன தொகை தீர்க்கப்பட வேண்டிய பொறுப்பாகவிருப்பினும், அது பொறுப்பாக வெளிப்படுத்தப்படாது அது தொடர்ச்சியாக பொது வைப்பு கணக்கில் மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த மீதி சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு பணிக்கப்பட்டிருப்பது, அப்போதிருந்த சமூர்த்தி ஆணையாளர் திணைக்களத்தின் வைப்பு கணக்கில் காணப்பட்ட மீதியாகவாகும். இது மானிய செலவு விடய பெறுப்பாக கணக்கிடப்பட்டிராமை நடப்பு ஆண்டில் மானியங்களுக்கான செலவினங்கள் சமூர்த்தி அதிகார சபியிடமிருந்து பெறப்பட்ட பணத்தில் தீர்க்கப்பட்டமையினால் செலவ விடய பொறுப்பு அறிக்கையிடப்பட்டிராத காரணத்தினாலாகும். அதன் பிரகாரம் தொடர்புடைய மீதி மூன்றாம் தரப்பினருக்கு தீர்க்கப்பட வேண்டிய கடப்பாடாக வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்கள் தீர்க்கப்படுவதற்காக குறித்த நடவடிக்கைகள் எடுக்கக்கடல் வேண்டும் மற்றும் கணக்குகளிலிருந்து சரியாக வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | குறுநிதி வங்கி பிரிவு ஊடாக வெவ்வேறு பணிகளுக்காக மாவட்ட சமூர்த்தி ஆலுவலகங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த பணத்தில் 2020 திசெம்பர் 31 இற்கு எஞ்சிய மீண்டும் அனுப்பப்பட்டிருந்த ரூபா 2,955,664 அப் பிரிவிற்கு தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படாது பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் கட்டுநிதி பெறுவனவு காணப்பட்ட பின்டைவு காரணத்தினால் தேவையற்ற கொடுப்பனவுகளுக்காக காசுப் புத்தகத்தில் மீதி இடப்படும் போது வைப்பு கணக்கிற்கு தொடர்புடைய இந்த தொகைகளிலும் செலவினம் ஏற்றிருத்தல் காரணத்தினால் தீர்ப்பனவு செய்தல் அடையாளப்படுத்தும் சந்தர்ப்பத்தில் போதுமான தொகையாக காணப்படவில்லை. இது தொடர்பாக திறைச்சேரியிக்கு தெரியப்படுத்தி கட்டுநிதி கோரப்படினும் கட்டுநிதி கிடைக்கப்பெறாமையினால் இம் மீதி குறுநிதி பிரிவினால் தீர்ப்பதற்கு முடியாது காணப்பட்டது. | ஆண்டு இறுதியில் உள்ளவாரான செலவினம் அடையாளப்படுத்தப்பட்டு சரியாக தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2017 சனவரி தொடக்கம் 2018 திசெம்பர் வரையான காலத்தினுள் வெளியிடப்பட்டிருப்பினும் கொடுப்பனவிற்கு முன்வைக்கப்படாத கூட்டுத்தொகை ரூபா 497,375 ஆன காலாவதியாகிய 66 காசோலைகள் நிதி பிரமாணம் 396(அ) பிரகாரம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது , பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | நிதி பிரமாணம் 570 பிரகாரம் காலாவதியாகிய காசோலைகள் 02 ஆண்டு காலம் வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு அரச வருமானத்திற்கு வரவு வைப்பதற்கு உள்ள நிதியேற்பாட்டின் அடிப்படையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2018 ஒக்தோம்பர் தொடக்கம் 2019 நவம்பர் 25 வரையான காலப்பகுதியினுள் 26 சந்தர்ப்பங்களின் போது திணைக்கள உத்தியோகப்பூர்வ கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 1,338,012 நிதி மூலங்கள் அடையாளப்படுத்தப்பட்டு தேவையான இணக்கம் மேற்கொள்ளப்படாது பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இந்த பண மீதி வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது, அவை வரவு வைக்கப்பட வேண்டிய நிதி மூலங்கள் தேடப்பட்டு மாற்றப்படும் அல்லது அவ்வாறு நிதி மூலங்கள் அடையாளப்படுத்தப்படாத அனைத்து நேரடி வரவுகளும் அரசின் வருமானத்திற்கு மாற்றப்படும் நோக்கத்திலாகும். | நிதி மூலங்கள் அடையாளப்படுத்தப்பட்டு சரி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஊ)** | சமூர்த்தி பயனாளிகளின் பங்களிப்பு பணத்தில் கட்டப்பட்டுள்ள குறுநிதி வங்கி பிரிவு மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்தின் வெவ்வேறு கொடுக்கல்வாங்கல்கள் திறைச்சேரி அங்கீகாரம் பெறப்படாது பொது வைப்பின் ஊடாக மேற்கொள்ளல் தொடர்பாக கடந்த ஆண்டுகளில் கணக்காய்வின் ஊடாக விடயங்கள் காண்பிக்கப்படினும் அது குறித்து கவனம் செலுத்தப்படாது 2020 ஆம் ஆண்டிலும் கொடுக்கல் வாங்கல்கள் பொது வைப்பு கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. அக் கொடுக்கல் வாங்கல்களில் பின்னர் 2020 திசெம்பர் 31 இற்கு குறுநிதி பிரிவிற்கு தீர்க்கப்பட வேண்டிய ரூபா 79,342,047 உம் சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு தீர்க்கப்பட வேண்டிய ரூபா 428,940 உம் ஆக கூட்டுத்தொகை ரூபா 79,770,987 ஆன மீதி பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சுயாதீன நிதியமாகியமையினால் அவ் அடிப்படையில் குறுநிதி வங்கி பிரிவின் மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்தில் பெறுவனவுகள் மூன்றாம் தரப்பினர்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்ற வைப்பு கணக்கு வகுப்பின் கீழ் கணக்கிடப்பட்டு தொடர்புடைய கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | திறைச்சேரி அங்கீகாரம் பெறப்பட்டு சரியாக தீர்க்கப்படல் வேண்டும். |
| **(எ)** | சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒருங்கிணைந்த உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டு பணிக்கொடை தொகை சமூர்த்தி வங்கி சங்கங்களின் நிதியங்களில் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை மீண்டும் சமூர்த்தி வங்கி சங்கங்களுக்காக மீள்நிரப்பப்படுவதற்காக 2019 திசெம்பர் 31 ஆம் திகதி திறைச்சேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய எஞ்சிய பணத்தில் | 2020 ஆம் ஆண்டின் மே மாதம் சம்பளம் செலுத்துவதற்காக கட்டுநிதி போதுமான அளவு காணப்படாமையினால் திறைச்சேரியிடமிருந்து நிலுவை கட்டுநிதி பெறப்படும் வரையில் இந்த பணம் சம்பளம் செலுத்தப்படுவதற்காக பயன்படுத்தப்பட்டது. இந்த விடயம் குறிப்பிடப்பட்டு சம்பளத்திற்காக தேவையான எஞ்சிய கட்டுநிதி அச் சந்தர்ப்பத்தில் கோரப்படினும் திறைச்சேரியினால் அக் கட்டுநிதி பெற்றுக் கொடுக்கப்படாததுடன் 2020.12.31 ஆம் திகதி கணக்கு தீர்க்கப்படுவதற்கு முன்னரும் கோரப்படினும் பணம் கிடைக்கப்பெறாமையின் அடிப்படையில் | வங்கி சங்கங்களுக்கு மீள் நிரப்பப்படுவதற்கு அல்லது அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 84,296,720 ஆன நிறுத்தி வைக்கப்பட்டு பொது வைப்பு கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு ஆண்டிற்கு அதிக காலம் கடந்திருப்பினும் மீண்டும் வங்கி சங்கங்களுக்கு மீள்நிரப்பப்படுவதற்கு அல்லது அரச வருமானத்திற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதி தீர்க்கப்படுவதற்கு முடியாதுபோனது. 2021 ஆம் ஆண்டில் தொடர்புடைய கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | மூன்றாம் தரப்பினர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகின்ற வைப்பு கணக்கில் திசெம்பர் 31 இற்கு ரூபா 2,556,871,700 ஆன மீதியினுள் 08 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகள் இடையேயான காலம் பழைய வைப்பு மீதி ரூபா 2,374,500,000 ஆக காணப்பட்டது. | இந்த மீதி தீர்ப்பதற்காக பல சந்தர்ப்பங்களில் திறைச்சேரியிடமிருந்து கோரப்படினும் இது வரையில் அதற்கு தேவையான கட்டுநிதி அல்லது நிதியேற்பாடு பெறப்படாமையினால் இன்னுமாக வைப்பு கணக்கு மீதியாக குறிக்கப்பட்டிருந்தது. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 1995 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த சமூர்த்தி நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக வறுமையை ஒழித்து சமூகத்தினை வலுப்படுத்தக் கூடிய வகையில் குறித்த அளவுகோள்களை அடையாளப்படுத்தி தேசிய கொள்கையொன்று தயாரித்து நோக்கத்துடன் நிகழ்ச்சி திட்டங்கள் வழிநடத்தப்படவும், தேவையான விழிப்புனர்வுகள் மேற்கொள்ளப்பட்டு சமூகத்துடன் தகவல்கள் பரிமாற்றிக் கொள்ளும் தகவல் முறைமையொன்று அறிமுகப்படுத்திக் கொடுப்பதற்கும் | செயற்திட்டங்களின் வெற்றி என்பது வலுப்படுத்தப்பட்டுள்ள சமூர்த்தி பயனாளியாகும். அதன் பிரகாரம் வலுப்படுத்தப்பட்டுள்ள சமூர்த்தி பயனாளிகள் அடையாளப்படுத்தப்படும் முறைமையொன்று திணைக்களத்திடம் காணப்படாதிருப்பினும், 2020 ஆம் ஆண்டில் இதற்காக முறைமையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வறுமையை ஒழித்து சமூகத்தினை வலுப்படுத்தக் கூடிய குறித்த அளவுயோள்களை அடையாளப்படுத்தி தேசிய கொள்கையொன்று தயாரித்து நோக்கத்துடன் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் சமூர்த்தி பயனாளிகளை வலுப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு நிறுவப்பட்டிருந்த 1,074 ஆன சமூக அடிப்படையிலான வங்கி அமைப்பு அந் நோக்கத்திலிருந்து விலகி இலாபம் ஈட்டுதலை நோக்கமாக கொண்டு செயற்பட்டு வந்தது. 2013-2020 08 ஆண்டு காலத்தினுள் அரச சமூர்த்தி நிவாரண செலவினம் ரூபா 300,364 மில்லியன் உம் சமூர்த்தி அபிவிருத்தி செலவினம் ரூபா 7,413 மில்லியன் உம் ஆக காணப்பட்டது. சமூர்த்தி பயனாளிகள் வலுப்படுத்தும் நோக்கத்தினை அடைவதற்காக எதிர்கால அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் அடையாளப்படுத்தப்படுவதற்கு முறைமையொன்று ஸ்தாபித்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.2 திட்டமிடல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | 2014 பெப்ரவரி 17 திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிராமையின் காரணத்தினால் பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) | சமூக அடிப்படையிலான வங்கி மற்றும் திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளுக்கு தொடர்புடைய ஒட்டுமொத்த பணிப்பொறுப்பும் உள்ளடங்கும் வகையில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருப்பினும், வாழ்க்கைத்தர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 194.58 மில்லியன் ஆன நிதியேற்பாட்டிற்காக எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் மட்டும் உள்ளடக்கப்பட்டு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அந் நிதியேற்பாட்டில் ரூபா 97.47 | 2020 செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக திணைக்களத்தின் அபிவிருத்தி செலவு விடயத்திற்கு தொடர்பாக ஒதுக்கப்பட்ட ரூபா 194.58 மில்லியன் நிதியேற்பாட்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு மேலதிகமாக, சமூக அடிப்படையிலான வங்கி பிரிவின் திட்டம், சமூக பாதுகாப்பு பிரிவின் திட்டம், வீடமைப்பு லொத்தர் நிகழ்ச்சித் திட்டத்தின் திட்டம், உள்ளக கணக்காய்வு திட்டம் மற்றும் பெறுகை திட்டமும் | சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் ஒட்டுமொத்த பணிப்பொறுப்பும் உள்ளடக்கபடும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு சிறந்த முகாமைத்துவத்துடன் நோக்கங்கள் அடையப்படுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன், அதாவது 50.09 சதவீதம் 2019 ஆம் ஆண்டின் கையிலிருந்த விலைப்பட்டியல்கள் மற்றும் செயல்படாத செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. | உள்ளடங்கலாக அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட்ட முழுமையான அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட வேண்டிய வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவை திட்டம், வருடாந்த பெறுகை திட்டம் மற்றும் நிறுவன கட்டமைப்பு உள்ளீர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த கட்டுநிதி தேவைத் திட்டம் அதனுள் உள்ளீர்ப்பு செய்யப்பட்டிராததுடன், அது எதிர்கால திட்டங்களின் போது உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடுவதற்கு விரும்புகின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு சிறந்த முகாமைத்துவத்துடன் நோக்கத்தினை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| சமூர்த்தி உற்பத்தி மாதிரி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக மாத்தளை பல்லேபொல தெமதஓய கிராமத்தில் பால்பசுக்கள் கட்டுப்பாட்டிற்காக 50 பயனாளிகளை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டில் பெற்றுக் கொண்ட ரூபா 1,820,000 ஆன நிதியேற்பாட்டில் கொத்மலை நிறுவனத்திற்கு பண்ணைகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 1,000,000 செலுத்தப்பட்டிருந்தது. பால் பசுக்கள் பெற்றுக் கொடுப்பதற்கு உடன்பட்ட வழங்குனர்களினால் பால் பசுக்கள் பெற்றுக் கொடுக்காமை, உபகரணங்களின் விலை அதிகரித்தமை காரணத்தினால் பயனாளிகள் அவ் உபகரணங்களை நிராகரித்தல் காரணத்தினால் செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட நிலைமையினால் கையிலுள்ள விலைப்பட்டியல்களுக்காக கட்டுநிதி அவர்களுக்கு கிடைக்கப்பெற்றிருப்பது மே மாதத்திலாவதனால் அவர்களினால் பால் பசுக்கள் கொள்வனவு செய்வதற்கு உடன்பட்டிருந்த சேருதண்டாபொல பால் கிராமத்தில் பால் பசுக்கள் அத் தருனத்தில் விற்பணை செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, பணம் கிடைக்கப்பெறும் போது பால் உபகரணங்களின் விலை அதிகர்த்தமையின் அடிப்படையில் பயனாளிகள் அவ் உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கு நிராகரித்திருந்தனர். | சமூர்த்தி பெறுநர்கள் வலுப்படுத்தும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக திட்டமிடப்பட்டிருந்த செயற்பாடுகள் குறித்த வண்ணம் செயற்படுத்தப்படல் வேண்டும். |

## 3.4 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டில் ரூபா 5,133,875 செலவிடப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருந்த 2 ஆரோக்கிய உணவகங்கள் மற்றும் 2020 ஆம் ஆண்டில் ரூபா 11,314,925 செலவிடப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருந்த 4 ஆரோக்கிய உணவகங்களில் மீளாய்வாண்டில் ஹம்பந்தோட்டை ஆரோக்கிய உணவகம் மட்டும் திறந்திருந்தது. | 2019 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட 02 ஆரோக்கிய உணவகங்களுக்கு தொடர்பாக விலைப்பட்டியல் செலுத்தல் 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டிருப்பினும் கொவிட் 19 காரணத்தினால் ஆண்டு இறுதியில் திறப்பதற்கு முடியாது போனது. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் குறித்த வண்ணம் செயற்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | அம்பாறை மாஓய வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான அரை ஹேக்கரிலான நிலத்தில் கூட்டுத்தொகை சதுர அடி 5218 இலான 2 மாடிகளைக் கொண்ட ஆரோக்கிய உணவகங்கள் மற்றும் சமூர்த்தி ஓய்வறையைக் கொண்ட கட்டிடமொன்று நிர்மாணிப்பத்தல் தொடர்பாக முதல் கட்டம் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை கூட்டுத்தொகை ரூபா 43,457,347 ஆக மதிப்பிடப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டு வரை ரூபா 35,042,514 பிரதான அலுவலகத்திலிருந்து மாவட்ட அலுவலகத்திற்கு நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்து. முதல் மற்றும் இரண்டாம் கட்டத்திற்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 13,812,142 செலுத்தப்பட்டிருப்பினும் இரண்டாம் கட்டம் நிறைவு செய்து 2018 ஆம் ஆண்டில் கொடுக்கப்பட வேண்டியிருப்பினும் 2021 ஆம் ஆண்டு வரையிலும் நிறைவு செய்திருக்கவில்லை. | அம்பாறை மாஓய விற்பனை மத்தியநிலையம் மற்றும் ஆரோக்கிய உணவகம் மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டிருந்தது 2017 ஆம் ஆண்டிலாகும். 2020 ஆம் ஆண்டிற்காக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருப்பினும், கொவிட் 19 மற்றும் பலத்த மழையின் காரணத்தினால் தொடர்புடைய செயற்திட்டத்தின் வேலை நிறைவு செய்வதற்கு முடியாத நிலை ஏற்பட்டது. இந்த செயற்திட்டத்தின் வேலை 2021 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதனால் ரூபா 14.8 மில்லியன் ஆன நிதியேற்பாடு மற்றும் கட்டுநிதி அம்பாறை மாவட்ட செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் குறித்த வண்ணம் செயற்படுத்தப்படல் வேண்டும். |

## 3.5 கொவிட் - 19 சமூக நலன் ரூபா 5000 கொடுப்பனவு செலுத்தல்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| நலன் உரித்துடைய 5 குழுக்களுக்காக I மற்றும் II கட்டங்களின் கீழ் 10,021,055 குடும்பங்கள் மற்றும் 71,383 ஊனமுற்ற, சிறுநீரக நோயுற்ற வயதான பயனாளிகளுக்காக ரூபா 50,462.19 மில்லியனும், உத்தியோகத்தர்களுக்காக மறைமுக செலவினங்களுக்காக ரூபா 34.63 மில்லியனும், வங்கி கடன் வட்டியாக ரூபா 542.10 உம் உள்ளடங்கலாக கூட்டுத்தொகை ரூபா 51,038.92 மில்லியன் செலவு ஏற்பதற்கு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| **(அ)** குறுநிதி பிரிவினால் முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேற்குறிப்பிட்ட மானியம் செலுத்துவதற்கு தேவையான பணம் பெற்றுக் கொள்ளல் வங்கிக் கடன் (நிலையான வைப்பு பிணை வைக்கப்பட்டு) ஊடாக, குறுநிதி வங்கி பிரிவின் முதலீடு முதிர்ச்சியடைய செய்தல், குறுநிதி பிரிவின் சேமிப்புக்கள் மற்றும் சமூர்த்தி வங்கியின் ஊடாகவும் கூட்டுத்தொகை ரூபா 53,588.96 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இந்த நிதியேற்பாட்டில் உத்தியோகப்பூர்வ வங்கி கணக்கின் ஊடாக ரூபா 34,225.63 மில்லியனும் சமூர்த்தி பயனாளிகளின் கட்டாய சேமிப்பு கணக்கின் ஊடாக ரூபா 7,893.26 மில்லியனும் மற்றும் சமூக அடிப்படையிலான வங்கிகளின் ஊடாக நேரடி கொடுப்பனவுகள் ரூபா 11,363.32 மில்லியனுமாக கூட்டுத்தொகை ரூபா 53,482.21 மில்லியன் சமூக அடிப்படையிலான வங்கிக்கு மாற்றப்பட்டிருந்தது. அது தொடர்பாக முறையாக தகவல்கள் பேணப்பட்டிராததுடன் பயன்படுத்தப்பட்ட பணத்தில் பிரதேச அலுவலகங்களின் செலவினம் மற்றும் எஞ்சிய பணம் இணைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 5.000 ஆன கொடுப்பனவு செலுத்தப்பட்டதன் பின்னர் சமூர்த்தி வங்கியினால் முன்வைக்கப்படுகின்ற எஞ்சிய பெறுவனவுகள் அனைத்தும் பொது வைப்பு கணக்கில் பெறுவனவுகளாக கணக்கிடப்பட்டு அறிக்கையிடப்பட்டிருந்தது. அவ் பெறுவனவுகள் அனைத்தும் வைப்பு பதிவேடுகளில் குறிப்பிடப்படுவதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரதேச அலுவலக செலவினம் மற்றும் எஞ்சிய பணம் இணக்கம் செய்யப்பட்டு அறிக்கையிடுமாறு மாவட்ட அலுவலகங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையாக தகவல்கள் பேணப்பட்டு பயன்படுத்தப்பட்ட பணம் மற்றும் எஞ்சிய பணம் இணக்கம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 31 நிலையான வைப்புக்களில் முதலிடப்பட்டுள்ள சமூர்த்தி பயனாளிகளின் கட்டாய சேமிப்பு ரூபா 22,754 முதலீடு முதிர்ச்சி பெறுவதற்கு முன்னர் தேரச் செய்யப்பட்டதனால் சமூர்த்தி பயனாளிகளின் கட்டாய சேமிப்பிற்காக பெறப்பட வேண்டிய ரூபா 556.46 மில்லியன் வட்டிப் பணம் இழக்கப்பட்டிருந்தது. | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன். | சமூர்த்தி பயனாளிகளின் கட்டாய சேமிப்பு முதலீட்டிற்காக இழக்கப்பட்ட வட்டிப் பணம் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | வெவ்வேறு மூலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்தில் செலவு செய்யப்பட்ட ரூபா 51,038.92 மில்லியன் ஆன பணத்தில் வங்கி கடன் பணம் ரூபா 16,000 மில்லியன் மற்றும் அதன் மீது வட்டி ரூபா 542.10 மில்லியன் மட்டும் திறைச்சேரியிடமிருந்து மீள்நிரப்பு செய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய பணம் தீர்க்கும் விதம் தொடர்பில் உறுதிப்படுத்தல்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | குறுநிதி பிரிவில் கடன் தீர்க்கப்படுவதற்காக ரூபா 24 பில்லியன் நிதியேற்பாடொன்று விடுவிக்கப்பட்டிருப்பினும், அதற்கு தொடர்பான கட்டுநிதி பெறப்படாமையின் காரணத்தினால் திசெம்பர் மாதத்தில் அப் பணம் தீர்ப்பதற்கு முடியாது போனது. தொடர்புடைய பணம் மீள் நிரப்பு செய்து தருமாறு தற்போது பல சந்தர்ப்பங்களின் போது திறைச்சேரியிடமிருந்து கோரப்பட்டுள்ளன. | எஞ்சிய பணம் தீர்க்கப்படுவதற்கு நடவடிகதை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | காத்திருப்பு முதியோர்கள், ஊனமுற்றோர் மற்றும் சறுநீரக நோயாளர்களுக்கான ரூபா 5,000 ஆன கொடுப்பனவு சமூர்த்தி சமூக அடிப்படையிலான வங்கி சங்கங்கள் ஊடாக கொடுப்பனவு செய்வதற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ஆலோசனையின் பிரகாரம் அவ் 71,383 பயனாளிகளுக்காக ரூபா 356,915,000 அனைத்து சமூக அடிப்படையிலான உத்தியோகப்பூர்வ கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட பின்னர் பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. 2020 மே 01 திகதிய DSD/03/ACC/8/IMP/2020 ஆம் இலக்க சமூர்த்தி திணைக்களத்தின் கணக்காளரின் கடிதத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டு முடித்ததன் பின்னர் எஞ்சிய பணம் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு ரீசீது பிரதான அலுவலகத்திற்கு பக்ஸ் செய்யமாறும் கொடுப்பனவுகளுக்கு தொடர்புடைய செயன்முன்னேற்றம் சமூக சேவை உத்தியோகத்தர் மற்றும் மூத்த ஊக்குவிப்பு உத்தியோகத்தரினால் | இந்த அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வயோதிப, ஊனமுற்றோர் மற்றும் சிறுநீருக நோயாளருக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்காக ஏற்கப்பட்ட ரூபா 356,915,000 ஆன பணம் இந்த திணைக்களத்திற்கு மீள்நிரப்பு செய்து தருமாறு கோரப்பட்டு 2021 மார்ச் 19 திகதி ஊனமுற்ற நபர்களுக்கான செயலகத்திற்கு கடிதமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. | கட்டணம் செலுத்தப்பட்டு முடிவடைந்தவுடன் எஞ்சிய பணம் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு தொடர்புடைய செயன்முன்னேற்றம் தொடர்பாக அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

ஒருங்கிணைந்த அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு பிரதேச செயலாளரின் அங்கீகாரத்தில் திணைக்களத்திற்கு அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டிருப்பினும் தொடர்புடைய அறிக்கைகள் அல்லது எஞ்சிய பணம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் பயன்பாட்டிற்காக செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் 2018 இன் வரியல்லாத மாதாந்த வாடகை ரூபா 198,000 வீதம் 5 ஆண்டு காலத்திற்காக ரூபா 11,880,000 ஆன ஒப்பந்த பெறுமதியொன்றிற்கு வாகனமொன்று பெற்றுக் கொண்டிருக்கும் போதும் 2018 மார்ச் மாத்தில் பணிப்பாளர் நாயகத்தின் பயன்பாட்டிற்காக வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குத்தகை வாகனத்தின் தேவைப்பாடொன்று இல்லாமையின் காரணத்தினால் ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு வாகனம் மீண்டும் கொடுப்பதற்கு 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முயற்சி செய்யப்பட்டிருப்பினும் ஒப்பந்தத்திலிருந்து விலகுவதற்கு முடியாத பிரகாரம் நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் அது இரத்து செய்ய இயலாதிருந்தது. அதனால் வாகனம் ஓட்டப்படாத காரணத்தினால் 2018 ஏப்ரல் மாதத்திலிருந்து 2020 பெப்ரவரி மாதம் வரை செலுத்தப்பட்டிருந்த ரூபா 4,918,320 ஆன பணம் மற்றும் 2020 மார்ச் தொடக்கம் 2021 சனவரி வரை ரூபா 2,352,240 ஆன பொறுப்புடன் கூட்டுத்தொகை ரூபா 7,270,560 ஆன தொகை பயனற்ற செலவாக காணப்பட்டது. | பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. | திணைக்களத்தின் நோக்கங்கள் நிறைவேற்றிக் கொள்வதற்காக சிக்கனமாக மற்றும் வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

## 3.7 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

-------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| முன்னைய ஆண்டில் முன்வைக்கப்பட்ட 7 கணக்காய்வு ஐயவினாக்கள் மற்றும் மீளாய்வாண்டில் முன்வைக்கப்பட்ட 3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் முன்வைக்கப்பட்டிராததுடன், தாமதக் காலம் 5 மாதங்கள் தொடக்கம் 20 மாதங்கள் வரையான கால வீச்சில் காணப்பட்டது. அவ் ஐயவினாக்களுக்கு தொடர்புடையதாக கணிக்க கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 13,814 மில்லியன் ஆக காணப்பட்டது. | கொவிட் 19 தொற்று நிலையின் காரணத்தினால் 2020 ஆம் ஆண்டில் மார்ச் தொடக்கம் யூலை வரையான காலப்பகுதியினுள் அலுவலகம் மூடி காணப்பட்டமையும், உத்தியோகத்தர்கள் வேலைக்கு அழைக்கப்படாமையும் நிகழ்ந்தது. அதன் பின்னர் செப்தெம்பர் தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியினுள்ளும் தொற்று நோயின் காரணத்தினால் அனேக பணிகள் மட்டுப்படுத்தப்படுவதற்கு ஏற்பட்டது. கடந்த ஆண்டினுள் கணக்காய்வு ஐயவினாவிற்காக பதில் அளிக்கப்படும் போது தாமதம் ஏற்பட்டதனை ஏற்றுக் கொள்கின்றேன். தற்போது அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்காகவும் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளதுடன் விரைவாக முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதி பிரமாணம் 155 பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிதிப் பிரமாணம் 452(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு ஐயவினா பதிவேட்டினை பரீட்சித்து காண்பிக்கப்பட்டுள்ள குறைப்பாடுகள் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு கணக்காய்வு ஐயவினாக்களுக்கு உடனே பதில் அளிக்கப்படல் வேண்டும். |

## 3.8 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க சேவைகள் ஆனைக்குழுவினால் 2018 ஏப்ரல் 05 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த நிறைவேற்று சேவை வகைக்குரிய உயர்த்தல் நடைமுறைக்கு அமைவாக ஓய்வூதிய உரித்துரிமையுடன் விருப்பம் தெரிவித்த 20 உத்தியோகத்தர்களுக்காக 2013 இன் 01 ஆம் இலக்க திவி நெகும சட்டத்தின் 44 (உ) II உறுப்புரையின் ஏற்பாடுகள் மற்றும் பணிப்பாளர் நாயகத்தினால் 2019 ஏப்ரல் 4 திகதி வெளியிடப்பட்டிருந்த 3/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அனைத்து நிபந்தனைகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் அமைவாக ஏற்போருக்கு தனிப்பட்ட ரீதியில் 2014 சனவரி தொடக்கம் அமுலாகும் வகையில் நிறைவேற்று சேவை வகையில் III ஆம் வகுப்பிற்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்டு 2019 யூலை 31 ஆம் திகதி அரசாங்க சேவைகள் ஆனைக்குழுவினால் நியமனக் கடிதம் வெளியிடப்பட்டிருந்தது. 3 ஆண்டுகள் விஞ்சுவதற்கு முன்னர் வினைத்திறன் தடைகாண் பரீட்சையும் நடத்தப்படாதிருந்ததுடன் 2019 யூலை 05 திகதிய DMS/1284/VI ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் கடிதத்தின் ஊடாக தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்காக ‘‘ஏற்போருக்கு தனிப்பட்ட ரீதியில்’’ என அகற்றப்படாது மீண்டும் பதவி அங்கீகரித்தல் தொடர்பான பிரச்சனையான நிலை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நியமனக் கடிதத்தில் பிரச்சனைக்குரிய நிலையை தீர்ப்பதற்கு அரசாங்க சேவைகள் ஆனைக்குழுவின் செயலாளருக்கு 2021.02.16 திகதிய கடிதத்தின் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது. | பிரச்சனைக்குரிய நிலைமை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அதிகார சபைகளின் உத்தியோகத்தர்கள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு உள்ளீர்ப்பு மற்றும் உயர்த்துதல் தொடர்பாக 2019 ஏப்ரல் 4 திகதிய 3/2019 ஆம் இலக்க சமுர்த்தி திணைக்கள சுற்றறிக்கையின் ‘‘ஆ’’ பிரகாரம் செயற்படாத சந்தர்ப்பங்கள் பின்வறுமாறு அவதானிக்கப்பட்டது. | | |

| | | | |
|---|---|---|---|
| i. | மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 3(1) I பந்தியின் பிரகாரம் திவிநெகும சட்டத்தின் 44(உ) II உறுப்புரையின் கீழ் அதிகார சபையொன்றில் முதல் நியமன திகதி தொடக்கம் ஓய்வூதிய உரித்துரிமையுடன் திணைக்களத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுகின்ற உத்தியோகத்தர்கள் அவ் அதிகார சபையின் முதல் நியமனத் திகதியிலிருந்து தமது கணக்கு நிறைவு செய்யப்படும் திகதி வரையில் ஊழிய சேமலாப நிதிய நிதியத்தில் தமது பெயரில் இருந்த மொத்த பணத்தில் 60 சதவீதமான அரச பங்களிப்பை மீண்டும் அரசிற்கு செலுத்தப்பட வேண்டுமென காணப்படினும் அப் பணம் அறவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. | பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| ii. | 1982 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் கீழ் பணிக்கொடையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பின் அவ் பெற்றுக் கொண்ட மொத்த பணமும் மீண்டும் அரசிற்கு செலுத்தப்படல் வேண்டும். (மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி) அப் பணம் விருப்ப ஓய்வு பெறும் வயதிற்கு அடையும் 55 வயதை அடையும் திகதிக்கு முன்னர் 60 தவணைகளுக்கு அதிகரிக்காத பல தடவைகளில் சம்பளத்திலிருந்து அறவிடப்படுவதற்கும் அவ்வாறு முடியாத சந்தர்ப்பத்தில் அறவிடப்பட வேண்டிய மொத்த பணத்தில் அறை பங்கிற்கு அதிகரிக்காத தொகையொன்று மாற்றத்தக்க ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடப்படுவதற்கு ஏற்பாடு செய்ய கூடும் எனவும், அறவிடப்பட வேண்டிய மொத்த பணம் ஓய்வூதிய திணைக்களத்திற்கு ஓய்வூதிய விண்ணப்பப்படிவம் அனுப்பும் திகதிக்கு கொடுப்பனவு செய்து நிறைவு செய்திருத்தல் வேண்டும். எனினும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களை தவிர மற்றைய அனைத்து உத்தியோகத்தர்களினதும் பணிக்கொடை பணம் அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கணக்கு பிரிவின் தகவல்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 திகதிக்கு செலுத்தப்பட்டிருந்த மொத்த | பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

பணிக்கொடை பணம் ரூபா 2,214,097,760 உம், அதற்காக 30 சதவீத மிகை கட்டணம் ரூபா 843,160,700 ஆக கூட்டுத்தொகை ரூபா 3,057,258,460 செலுத்தப்பட்டிருந்தது.

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2030 ஆம் ஆண்டளவில் வறுமையற்ற செழிப்புள்ள நாடாக இலங்கையை மாற்றுவதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலைப் பேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் குறிக்காட்டிகளுக்கு அமைவாக திட்டங்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தினால் நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்கள், குறிக்கோள்கள் மற்றும் குறிக்காட்டிகள் அடையாளப்படுத்தப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாரான பதவியணியினர் முறையாக 26,431, மற்றும் 25,255 ஆக காணப்பட்டதுடன் 1,178 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. திணைக்களத்தின் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டில் தனியார் ஆளணி வேதனச் செலவுத் தொகுதிக்காக ரூபா 12,823.44 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |

| | | | |
|---|---|---|---|
| **(அ)** | ஓய்வூதியம் உரித்தில்லாத உழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு தொடர்ச்சியான பங்களிப்பு ஏற்று திணைக்கள சேவைக்கு சேர்வதற்கு விருப்பம் தெரிவித்த 4 உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவைகள் ஆனைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருப்பினும் உயர்வு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டு தொடர்புடைய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதற்கு 2020 திசெம்பர் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ் உத்தியோகத்தர்கள் உதவி பணிப்பாள்ர பதவியில் கடமை மேற்கொண்டிருந்தனர். | பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டில்லை. | செயற்பாடுகள் விரைவுப்படுத்தப்பட்டு பிரச்சனைகள் தீரத்துக்கொள்ளப்படல் வேண்டும். |
| **(ஆ)** | சமுர்த்தி முகாமையாளருக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை பிரகாரம் 30 சதவீதம் திறந்த போட்டி பரீட்சையினூடாகவும் 70 சதவீதம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் **MN – 1** மற்றும் **MT – 01** சம்பள வகுதியின் கீழ் சம்பளம் பெறும் உத்தியோகத்தர்களினால் பரீட்சையினூடாக இணைக்கப்படல் வேண்டும். அவ்வாறாயினும் 2020 திசெம்பர் 31 இற்கு வெற்றிடமான 54 பதவிகளுக்காக இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அப் பதவிகளில் 16 பதிற் கடமை ஊடாகவும், 38 பதவி நிறைவேற்றல் ஊடாகவும் கடைமை நிறைவேற்றப்பட்டு செல்லப்படுகின்றது. | பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டில்லை. | செயற்பாடுகள் விரைவுப்படுத்தப்பட்டு பிரச்சனைகள் தீரத்துக்கொள்ளப்படல் வேண்டும். |